ISSN:2582-9599



# தமிழ் இலக்கியங்கள் கூறும் கல்வி

**முனைவர் ஆ. விஜயராணி ,தமிழ்ப் பேராசிரியர்**

**தாகூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி ,புதுச்சேரி-8**

**vijayarani@gmail.com**

5

**ஆய்வுச்சுருக்கம்**

இன்றையஉலகில்யாவருக்கும்இன்றியமையாதஒன்றாகத்திகழ்வதுகல்வியே.எந்தச்சமூகத்தினரும்இக்கல்வியைக்கற்பித்ததிலிருந்துவிலகிச்செல்வதுஇல்லை.ஏனெனில்கல்வியின்சிறப்பைஅனைத்துச்சமூகத்தினரும்புரிந்துகொண்டுஉள்ளனர்.இதனால்தான்கல்விமனிதனின்அத்தியாவசியதேவையாகஉள்ளது.அக்கல்வியின்சிறப்புபற்றிஅறியும்போதுகல்விகற்றவன்எந்தஇடத்திற்குச்சென்றாலும்அவன்பிறசமூகத்தால்மதிக்கப்படுகின்றான்.இதற்குக்காரணம்அவன்கற்றகல்வியே.கற்றவனுக்குத்தனதுநாடும்ஊரும்அல்லாமல்எல்லாநாடும்ஊரும்அவனுடையதாகும்என்றசிறப்பும்உண்டு.இப்படிகல்விகற்றவனின்சிறப்புஅவன்இறக்கும்வரைஒருஉயர்வைத்தரக்கூடியதாகஉள்ளது.அவன்இறந்தபிறகும்அதுஇலக்கியஉலகில்வலம்வரக்கூடியஒன்றாகவும்இருக்கின்றது.இதனைத்வள்ளுவர்கல்விஎன்றஅதிகாரத்தில்விளக்கும்போது,

ஒருமைக்கண்தான்கற்றகல்விஒருவற்கு
எழுமையும்ஏமாப்புடைத்து( குறள்-398)

என்றும்கல்விகற்றோன்நடந்துகொள்ளக்கூடியபண்பினைச்சுட்டும்போது,

கற்ககசடறகற்பவைகற்றபின்
நிற்கஅதற்குத்தக(குறள்- 391)

என்றும்கூறுகின்றார்.கல்விஎன்பதுமனிதகுலத்துக்குவழிகாட்டக்கூடியஒன்று.
அதனைப்புரிந்துகொண்டுவாழ்க்கையில்நன்மையைநாம்அறிந்துகொள்ளஇந்தகல்வியேஅறிவுசார்ந்தநிலையில்துணைசெய்கிறது.மனிதனுடையபுலன்கள்அறிவுசார்ந்துசெயல்படுவதற்கும்க்கல்வியேஉறுதுணையாகஅமைகின்றது.கல்விஎன்பதுவிழிப்புணர்ச்சிபெறுவதற்கானஒருஅணுகுமுறை.மனிதனின்பல்வேறுதிறமைகள்,ஆற்றல்கள்அவனதுசிறப்புகள்எல்லாம்வெளிப்படுவதற்குஇந்தக்கல்வியேஉறுதுணையாகஇருக்கின்றது.கல்வியேஅவன்விழிப்படையச்செய்வதற்குரியகருவியாகவும்இருக்கிறது.எனவேகல்வியில்பயிற்சிபெற்றஒருவன்விழிப்புணர்வுபெற்றான்என்றால்அவன்இந்தஉலகில்மிகசிறப்புபெற்றுநிலைத்துவாழ்வான்என்பதைபலரும்கல்வியின்மேன்மையாகக்கூறியுள்ளனர்.

கல்விபற்றியசிறப்புசெய்திகளையும்கல்விகற்கவில்லைஎன்றால்அதன்இழிவுகள்என்னஎன்பதையும்பலஇலக்கியங்கள்சுட்டிக்காட்டிசென்றுள்ளன.அந்தவகையில்தமிழ்இலக்கியங்கள்சங்ககாலம்தொடங்கிஇன்றுவரைக்கும்வந்துள்ளஅத்தனைஇலக்கியங்களிலும்கல்விபற்றியஅறிவுறுத்தல்கள்பலஇலக்கியதிறனாய்வாளர்களாலும்புலவர்களாலும்வலியுறுத்தப்பட்டுஉள்ளன.அத்தகையகல்விசார்ந்தகருத்துக்கள்இலக்கியங்களில்எவ்வாறுவலியுறுத்தப்பட்டுள்ளனஎன்பதைவெளிப்படுத்தும்போக்கில்இந்தக்கட்டுரைமுன்நிற்கின்றது.

இதில்தமிழ்இலக்கியங்கள்என்றமுதன்மையானதலைப்பின்அடிப்படையில்கல்விபற்றியபொரு

ள்வரையறை,அச்சொல்குறித்துஅகராதிகள்தரக்கூடியபல்வேறுவிளக்கங்கள்,சங்ககாலத்திற்குமுன்பாகவும்அல்லதுபின்பாகவும்தோன்றியஇலக்கணமாககுறிப்பிடப்படும்தொல்காப்பியம்கல்விபற்றிகுறிப்பிடும்செய்திகள்,அதனைத்தொடர்ந்துசங்கஇலக்கியங்கள்குறிப்பிடக்கூடியகல்விபற்றியபல்வேறுகருத்துக்கள்அதன்சிறப்புகள்,பின்திருவள்ளுவர்கூறும்கல்விபற்றியசிந்தனையும்கல்விகற்கவில்லைஎன்றால்எத்தகையதீமைகள்அடைவர்என்றகருத்தும்அதனைதொடர்ந்துவந்தநீதிநூல்கள்எவ்வாறுகல்விபற்றியகருத்துக்களைச்சமூகத்திற்குஎடுத்துரைத்துள்ளனஎன்றசிந்தனையும்இந்தக்கட்டுரையில்ஆராயப்படஉள்ளது.

இவ்வகையில்தமிழ்இலக்கியங்கள்கூறும்கல்விஎன்றதலைப்பின்அடிப்படையில்காலந்தோறும்வந்துள்ளஇலக்கியங்களின்சான்றுகளைவிளக்கிச்செல்லக்கூடியவகையில்இந்தக்கட்டுரைவடிவமைக்கப்பட்டுள்ளதுஎன்பதும்குறிப்பிடத்தக்கது.

**ஆய்வுநோக்கம்**

தமிழ்இலக்கியங்கள்கூறும்கல்விஎன்றதலைப்பினைஎடுத்துக்கொண்டுஆராய்வதேஇந்தஆய்வின்நோக்கமாககொள்ளப்படுகிறது.அதில்தொல்காப்பியர்காலம்தொடங்கிதற்காலவரைவந்துள்ளஇலக்கியங்களில்கல்விபற்றியசிந்தனைகள்எவ்வாறுவலியுறுத்தப்பட்டுள்ளனஎன்றநோக்கத்தின்அடிப்படையில்இக்கட்டுரைஆராயப்படுகின்றது.

பழங்காலத் தமிழர்களின் நாகரிகத்தையும் பண்பாட்டையும் அறிந்துகொள்ள பெரிதும் துணை புரிவது அக்கால மக்களின் வாழ்க்கை முறை எனலாம். அத்தகைய வாழ்க்கை முறையைப் பற்றி அறிவதற்கு அம்மக்களின் வாழ்வியல் எச்சங்களாக இலக்கியங்களே பெரிதும் துணைபுரிகின்றன. குறிப்பாக அரசியல், கல்வி, சமூகம், பொருளாதாரம், சமயம் எனும் பல நிலைகளில் மக்களின் சமூக வாழ்வியலை நாம் அறிந்து கொள்ள வேண்டியுள்ளது. இவற்றில் கல்வியும் கல்வி சார்ந்த அறிவும் ஒரு முக்கிய பங்கினைப் பெற்றுத் திகழ்கிறது.

கல்வியைக் கொண்டே ஒரு மனிதனை நாம் பண்பட்ட மனிதனாக அடையாளம் காணமுடியும். அவர்களின் பண்பாட்டையும் நாகரீகத்தையும் அறிவதற்கு நமக்குப் பெரிதும் உறுதுணையாக இருப்பது கல்வி பற்றிய சிந்தனைகளே. அக்கல்வி பற்றிய சிந்தனையைத் தமிழ் இலக்கியங்கள் எங்ஙனம் எடுத்துரைக்கின்றன என்பதை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**கல்வி-பொருள் வரையறை**

தொடக்கக் காலத்தில் கல்வி என்னும் கருத்தாடல் உழைக்கும் மக்களைக் கொண்ட பண்பாட்டினை உடையதாக இருந்துள்ளது. உழைக்கும் நிலையில் பெறும் அனுபவத்தைத் தன் சந்ததிக்கு அளித்து வாழ்க்கையை மேன்மை அடைய செய்வதே அந்நாளைய மக்களின் கல்வியாகவும் அவர்களின் கலாச்சாரமாகவும் இருந்து வந்துள்ளது. கல்வி அறிவு என்பது கற்பதால் அறிவு வளரும் அறிவால் உண்மைகளை கண்டறியலாம் எனக் கல்வி என்பதற்கு உண்மையான விளக்கங்கள் தரப்படுகின்றன.

கல்வி எனும் சொல் பற்றிக் கூறுகையில் கல்வி என்ற சொல் “கல“ என்னும் பகுதியையும் “வி“ என்னும் தொழிற்பெயர் விகுதியையும் உடையது. இந்தக் கல்வி என்பதற்கு கல்லுதல், தோன்றுதல் எனப் பொருள் கூறப்படுகிறது. தொடக்கக் காலத்தில் கல்வி என்பது மனத்தைத் தோண்டுதல், அறிவைத் தோண்டுதல் என்ற பொருளைப் பெற்றிருந்தது. அவ்வாறு கொள்ளுதல் வரலாற்றுப்

படிநிலை வளர்ச்சியின் முரணானது. எனினும் தொடக்கக்கால கல்வி அறிவுக்கல்வியாக இல்லை. மாறாக அனுபவத்தால் பெறும் கல்வியாகவே இருந்து வந்துள்ளது. பொதுவாகக் கல்வி எனும் சொல் காலந்தோறும் மாறுபட்ட பொருளில் வழங்கி வந்திருக்கிறது.

கல்வி என்பதற்குத் தமிழ் லெக்சிகன் கற்கை, கல்வியறிவு, வித்தை, பயிற்சிநூல்(தமிழ் லெக்சிகன்) எனப் பல பொருள் கூறுகின்றது. கல் என்பதற்கு கல், மலை, கல்வி, திறன்கள், தோன்றுதல்(அகராதி நிகண்டு) என்று அகராதி நிகண்டு பொருள் தருகிறது.

கல்வி பயிலும் இடத்தைக் கழகம் என்று கூறுவர். கல்வியைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்லான எஜுகேஷன் என்பதற்குக் கல்வி, தேர்ச்சி, படிப்பு, பழக்கம், கல்விப்பயிற்சி, வித்தை(வின்சுலோ ஆங்கிலத் தமிழ் அகராதி) என்று வின்சுலோ ஆங்கிலத் தமிழ் அகராதி குறிப்பிடுகிறது. கல்வி என்ற சொல் குறிக்கும் அகராதி விளக்கங்களுக்குத் தத்துவ விளக்கம் அளிக்கும் முறையும் சமூகப் பண்பாடுகளின் வழி காணப்படுகின்றது. எஜுகேஷன் என்பதற்கு முன்பு வெளிக்கொணர்தல் என்ற பொருள் கூறப்பட்டது. இன்று வளர்த்தல் என்ற பொருள் கூறப்படுகிறது. குழந்தையின் நற்பண்புகளையும் நல்ல ஆற்றல்களையும் வளர்த்து அவற்றின் மூலம் அதன் ஆளுமையின் சிறப்பு மிக்க வளர்ச்சிக்குக் கல்வி துணை போவதாகும்.

கல்வி என்பது ஒரு சமூகத்தைச் சார்ந்த ஒட்டுமொத்த அனுபவங்களின் நிகழ்வுகளைக் குறிப்பதாக அமைவதை அறியமுடிகிறது. நாளடைவில் இது சமூகவியலின் அடிப்படையில் கல்வி ஒரு தலைமுறையின் அனுபவத்தை மற்றொரு தலைமுறைக்குக் கடத்துவது என அறியப்படுகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த கல்வி பற்றி தமிழ் இலக்கியத்தில் எவ்வாறு விளக்கப்படுகிறது என்பது பின்வருமாறு ஆராயப்படுகின்றது.

**தொல்காப்பியர் குறிப்பிடும் கல்வி:**

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழரின் வாழ்க்கையைப் பற்றிய பதிவுகள் பழம் பாடல்களின் வாயிலாக நமக்குப் புலப்படுகின்றன. இப்பாடல்களில் நம் முன்னோர்களின் அறிவியல் அறிவும் ஆர்வமும் பளிச்சிடுகின்றன பழங்காலத்திலேயே உணர்வுக்கு விருந்தாய் கலைகளைக் கண்டு அறிவியல், கணிதம், வானவியல் என்ற விஞ்ஞான நுட்பங்களைக் கண்டிருந்த நிலையை உணர முடிகின்றது. தொல்காப்பியர் தமிழ் இலக்கணத்தில் முதல், கரு, உரிப்பொருள் என்று பாகுபடுத்தி, நிலத்தையும் பொழுதையும் கண்டிருந்தது தமிழர்தம் கூர்ந்த அறிவியல் அறிவு என்பதைச் சான்றாகக் கொள்ளலாம்.

“மறுவில் செய்தி மூவகைக் காலமும்

நெறியி னாற்றிய அறிவன்" (தொல்காப்பியம்.புறத்திணை.1020.3-4)

என்ற நூற்பாவில் அறிவன் என்ற சொல்லின் வழி அறிஞர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் வானவியலையும், அறிவியலையும் ஆய்ந்து போற்றி வந்துள்ளனர் என்னும் கருத்தைத் தொல்காப்பியர் உணர்த்த வருகின்றார்.

**சங்க இலக்கியம் கூறும் கல்வி**

தனி மனிதனுடைய வாழ்வையும் நாட்டின் வாழ்வையும் உயர்த்துவது கல்வி. கல்வி ஒரு கால எல்லையில் அடங்குவது அன்று என்றும் அது எல்லையற்ற பரப்புடையது என்றும் வாழ்நாள் முழுதும்

ஒருவன் கற்க வேண்டும் என்றும் புலவர்கள் வற்புறுத்தினார்.

‘கல்வி கரையில கற்பவர் நாள்சில

மெல்ல நினைக்கின் பிணி பல(நாலடியார்.14.5)

என்றும் மக்களைக் கல்லாது வளர விடல் தீது என்றும் புலவர்கள் கூறியுள்ளனர். கல்வி ஜாதி வேறுபாட்டைக் களையக் கூடிய கருவி என்று கருதினர். பாண்டிய மன்னன் ஒருவன் கல்வியை வற்புறுத்தி பாடிய செய்யுள் ஒன்று புறநானூற்றில் உள்ளது.

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்

பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே(புறநானூறு.183-1-2)

ஆசிரியருக்கு உற்ற இடத்தில் உதவியும் மிக்க பொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது கற்க வேண்டும் என்றும், அங்ஙனம் கற்றவனையே தாய் விரும்புவாள் என்றும், அறிவுடையோன் வழியில் அரசும் செல்லும் என்றும் வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ளும் கீழ்ப்பால் ஒருவன் கற்பின் மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே என்றும்(புறநானுறு.183) குறிப்பிட்டுள்ளார்.

**திருவள்ளுவர் கூறும் கல்வி**

திருவள்ளுவர் கல்வி, கல்லாமை, கேள்வி முதலிய பல அதிகாரங்களில் கல்வியின் பெருமையை வற்புறுத்துகின்றார். ஒருவன் தான் கற்ற கல்வி எடுக்கின்ற பிறவிதோறும் பலன் அளிப்பதை ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு எழுமையும் ஏமாப்பு உடைத்து என்று கூறுகிறார். கற்றவனுக்கு யாதும் ஊர் என்பது அவர் கருத்து இதனை,

யாதானும் நாடாமால் ஊராமல் என்ஒருவன்

சாந்துணையும் கல்லாத வாறு (குறள்-397)

என்று கூறுகிறார். அவ்வாறு ஐயமும் திரிபும் இன்றி கற்று, கற்ற வழியில் ஒழுகுதல் வேண்டும் என்பதை

கற்க கசடற கற்பவை கற்றபின்

நிற்க அதற்குத் தக (குறள்-391) என்று கூறுகிறார்.

எண்ணும் எழுத்தும் இரு கண்கள் என்பதை,

எண்ணென்ப ஏனைஎழுத்து என்பஇவ் விரண்டும்

கண்ணென்ப வாழும் உயிர்க்கு (குறள்-392)

என்று சுட்டுகிறார். கல்லாதார் விலங்குக்குச் சமமானவர்கள் என்றும் கூறுகிறார்.

**நீதி நூல்கள் கூறும் கல்வி**

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் அக நூல்கள் தவிர்த்து மீதி நூல்கள் அனைத்தும் கல்வி பற்றிய செய்திகளைக் கூறுகின்றன. நாலடியார் நெஞ்சத்து நல்லம் யாம் என்னும் கல்வி அழகே அழகு என்கிறது. இனியவை நாற்பது பிச்சைப் புகினும் கற்றல் மிக இனிதே என்கிறது.

நான்மணிக்கடிகை கல்லாத ஒருவனுக்கு அவன் சொல்லும் சொல்லே கூற்றாக அமையும் என்கிறது. சிறுபஞ்சமூலம் ஆசிரியர், தாய், தந்தை, தம் முன்னோர் என்னும் அனைவரையும் ஐங்குரவர் என்று பாராட்டிக் கூறுகிறது.

அவ்வாறே பழமொழியும் கல்வியின் பெருமையைப் பேசுகிறது. மனிதன் எவ்வளவு கற்பினும் முழுமையடைய முடியாதென்றும் கற்றோரும் அறியாமை மேலும் இருந்துகொண்டே இருக்குமென்றும்

அதனால் ஒருவன் கற்றான் ஆனாலும் தான் கல்லாதவன் என்றே நினைக்க வேண்டும் என்கிறது. கல்வியில் அக்கல்வியை கற்றலின் கேட்டல் நன்று என்று கூறுகிறது.

மேற்காட்டிய சான்றுகள் கல்வியின் பெருமை, கற்பவரின் இயல்பு, கற்றார் ஒழுக வேண்டிய முறை ஆகியவை பற்றிய தெளிவு தெளிந்த அறிவு உடையவராய் விளங்கினர் என்பது வெளிப்படையாக உணரப்படும். இத்தகுக் கல்வியை அளித்தல் தந்தையின் தலையாயக் கடமை என்பதை வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல் (குறள்-67) .

என்பதுடன் கல்வி என்பது வாழ்நாள் முழுவதும் தொடர்வது. தொடர்வதோடு அன்றி பிறவிதோறும் தொடர்ந்து பலனளிக்கக் கூடியது என்றும் கருதுகின்றார்.

இன்றைய காலகட்டத்தில் பலதரப்பட்ட கல்வியாக மிளிர்கின்றன. மருத்துவக்கல்வி, தொழில் நுட்பக்கல்வி, இசைக்கல்வி, சட்டக்கல்வி, ஓவியக் கல்வி ஆசிரியர் கல்வி, அறிவியல் கல்வி, கணிதவியல் கல்வி, பொறியியல் கல்வி, சுற்றுச்சூழல் கல்வி, பாலியல் கல்வி, உளவியல் கல்வி, தத்துவவியல் கல்வி எனப் பல நிலையில் பல பரிமாணங்கள் இருப்பினும் அறவியல் கல்வியென்பது இல்லாத நிலையே மிகுதியாக உள்ளது.

கல்வி என்பது மனிதனை மேன்மை படுத்துவது மட்டுமே. கல்வி நிலையங்கள் அறத்தையும் ஒழுக்கத்தையும் போதிக்கும் இடமாகவும் சான்றோர்களைப் போற்றும் கூடங்களாகவும் திகழ வேண்டும். நாலடியார் கல்வியை வீடுபேறு அளிக்கும் மருந்து என்றே கூறுகிறது. இதனை, இம்மை பயக்குமால் ஈதல் குறைவின்றால் தம்மை விளக்கு மால்தாம் உலராகேடி என்றால்

எம்மை உலகத்தும்யாம் காணோம் கல்விபோல் மம்மர் அறுக்கும் (நாலடியார். 14.2)

என்கிறது. அத்தகைய கல்வியானது எண்ணும் எழுத்தும் தவிர வானியல், மருத்துவம், இசை, ஓவியம், சிற்பம், நாட்டியம் முதலியவை பற்றிய கல்வியாகவும் சிறந்திருந்தது.

ஓவியச் செந்நூல் பற்றி மணிமேகலை கூறுகின்றது. கட்டிட நூல் பற்றி நெடுநல்வாடை கூறுகின்றது. இசை நூல் பற்றி தொல்காப்பியம் கூறுகின்றது. மருந்து வானியல் குறித்த பதிவுகளும் பண்டைய கல்வியாக இருந்துள்ளது. அன்று கற்றறிந்தார் கூடி சிந்திக்க வாய்ப்பிருந்தது.

சங்கம் அதற்காக அமைந்ததாகும். பட்டிமன்றங்கள் வைத்து அறிஞர்கள் பல பொருள்களைப் பற்றி வாதம் புரிந்து வைத்துள்ளார்கள். இதனை ”பல்கேள்வி துறைபோகிய தொல்லாணை நல்லாசிரியர் உடன் குறித்து எடுத்த உருகெழு கொடியும்(பட்டினப்பாலை) என்று பட்டினப்பாலை குறிப்பிடுகிறது.

சமண பௌத்த மதத்தினர் பள்ளிகளில் இருந்துகொண்டு கல்வி அளித்தனர். இதனாலேயே பள்ளி எனும் சொல் கல்வி நிலையத்தை குறிப்பதாயிற்று. பல்லவரும் சோழரும் வட மொழிக் கல்விக்கு ஊக்கமளித்தார் போல தமிழ் கல்விக்கு ஊக்கமளித்தார் அல்லர். எனினும் தமிழ்க்கல்வி வளரவே செய்தது. இடைக்காலத்து வடமொழிக் கல்வி தமிழில் காப்பியங்களும் அணி நூல்களும் வளர ஆரம்பித்தது. நாயக்க மன்னர்களின் காலத்தில் கிறிஸ்தவப் பாதிரியார்களால் பள்ளிகள் நடத்தப்பட்டுள்ளது. எளிய மக்கள் இதனால் பயன்பெற்றனர்.

மேல்தட்டு மக்களே படித்த நிலையில் ஆங்கிலேயர் காலத்தில் தான் என்றாலும், முறையான பள்ளிகள் தோன்றி பலரும் படிப்பதற்கு எதுவாகினும் அனைவரும் கல்வி கற்கும் நிலை பின்னாளில் படிப்படியாக வளரத் தொடங்கியது. காமராஜரின் காலத்தில் பல கல்விக்கூடங்கள் திறக்கப்பட்டுள்ளன. நாளடைவில் கல்வி என்பது எட்டாக்கனியாக இருந்த நிலையில் எல்லோரும் படித்து இன்புறும் தக்க ஒன்றாக கல்வி மாற்றத்தை அடைந்து வந்தன.

ஆனால் இன்றைய சமூகத்தில் அவை பெரும் கேள்விக்குறியாக்கப் பட்டு வருகின்றன. கல்வி என்பது இன்று பரவலாக இருப்பினும் கல்விக்கு முதன்மையாகத் திகழக் கூடிய ஒழுக்கம் என்பது நாளுக்கு நாள் குறைந்து வருகின்ற நிலையை நம்மால் காண முடிகின்றது.

இன்றைய இளைய சமுதாயம் ஒரு பக்கம் வளர்ந்து கொண்டிருக்கையில் மறுபக்கம் பல கொடிய பழக்கங்களுக்கு அடிமையாகிக் கொண்டிருக்கின்ற அவலத்தை நம்மால் பார்க்க முடிகின்றது. கல்வி ஒருவனுக்கு முதன்மையான ஒழுக்கத்தை அளிக்க உதவுவது. ஒழுக்கமற்ற கல்வி எத்தனை ஓதினும் அக்கல்விக்குப் பயனில்லை என்பதை பல நிலையில் நம் சான்றோர்கள் வலியுறுத்தியுள்ளனர் என்பதை உணர முடிகின்றது..

**தொகுப்புரை**

தமிழ் இலக்கியங்கள் கூறும் கல்வி என்ற தலைப்பின் வழி பெறப்பட்ட கருத்துகள் பின்வருமாறு.

1.கல்வி பற்றிய சிந்தனைகளைத் தமிழில் தோன்றிய அனைத்து இலக்கியங்களும் சமுதாய மக்களுக்கு உணர்த்தி வந்துள்ளன என்பதை உணர முடிகின்றது.

2. கல்வி கற்காமையால் ஏற்படும் நன்மை தீமைகள் காலந்தோறும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

3. கல்வி கற்பதால் ஏற்படும் பல்வேறு சிறப்புகள் பற்றியும் இலக்கியங்கள் எடுத்துக்கூறி சிந்திக்க வைத்துள்ளன என்பதையம் அறிய முடிகின்றத.

**பார்வை நூல்.**

1.பசுபதி.ம.வே.,( பதிப்பாசிரியர்), செம்மொழித் தமிழ் இலக்கண இலக்கியங்கள், தமிழ்ப் பல்கலைக்கழகம்,தஞ்சாவூர், சூன்-2010.

2. மிரோன் வின்சுலோ,(தொ.ஆ), ஆங்கிலத் தமிழ் அகராதி, அமெரிக்கத் திருச்சபைவெளியீடு,1862

3. கழகவெளியீடு, தமிழ் லெக்சிகன்(1-12),சென்னைப் பல்கலைக் கழகம்,சென்னை,2014